பக்கங்கள் 18 + 08

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 30 வியாழக்கிழமை 15.08.2024 | அதிர்வு 14

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு 'சங்கு'



ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தமிழ்ப் பொது வேட்பாளராகக் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 39 பேர் தகுதி

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்திய 40 வேட்பாளர்களில் 39 பேர் தமது வேட்புமனுக்களை இன்று சமர்ப்பித்துள்ளனர் எனவும், அவர்கள் 39 பேரும் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளனர் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.**

இதேவேளை, சுயேச்சை வேட்பாளர் சரத் குமார குணரத்ன வேட்புமனுப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இன்று காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரையில் இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான 04



## 'காஸ் சிலிண்டர்' சின்னத்தில் ரணில்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தேர்தல் சின்னமாக 'காஸ் சிலிண்டர்' சின்னத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

## வேலுகுமார் எம்.பி. ரணிலுக்கு ஆதரவு



ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். 04

# ரணில் என்ற நொண்டிக் குதிரையுடன் சேர்ந்த கண்டிக் கழுதையே வேலுகுமார்

### மனோ எம்.பி. கடும் கொதிப்பு

ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைமைக் குழுகளின் மெய்நிகர் கூட்ட முடிவுகளின்படி கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், கட்சி, கூட்டணி பதவிகளில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் விதமாக வெளியேற்றப்படுகின்றார். என் உயிரினும் மேலான கண்டி மாவட்ட மக்களுக்கும் நமது கட்சிக்கும், இவர் செய்துள்ள துரோகம் மன்னிக்க முடியாததாகும். 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் எனக்கு எதிராக கடும் இனவாத வன்முறையில் ஈடுபட்ட 04





# யாழில் இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டு இந்தியக் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் உரையைத் துணைத்தூதுவர் சாய் முரளி வாசித்தார்.



இந்த நிகழ்வில் துணைத்தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.














# சம்மாந்துறையில் பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வுச் செயலமர்வு

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் முறைசாரா கல்விப் பிரிவு ஏற்பாடு செய்த பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று (13) செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திர குமாரின் வழிகாட்டலில் வலயக் கல்விப் பணிமனையின் முறைசாரா கல்வி பிரிவின் ஆசிரியர் ஆலோசகர் எம்.ஐ.அகமட்லெவ்வையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் வளவாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

சம்மாந்துறை அல்.ஹம்றா முஸ்லிம் வித்தியாலயத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

இதன்போது சிறுவர் உரிமை மற்றும் கடமைகள் மற்றும் பெற்றோர் கடமைகள் தொடர்பாக பூரண விளக்கம் அளிக்கப்பட்டது.





# மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆயித்தியமலைப் பிரதேசத்தில் புதிதாக மதுபானசாலையொன்று திறக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து அதனைத் தடுத்து நிறுத்தக் கோரி அப்பிரதேச மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மண்முனை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று காலை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கல்வி அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் மக்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது மேற்குறிப்பிட்ட அமைப்புக்களால் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயத்திடம் கையளிக்கப்பட்டது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வேலுகுமார்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை, கொழும்பு – பிளவர் வீதியில் உள்ள அவரது தேர்தல் அலுவலகத்தில் இன்று சந்தித்த வேலுகுமார் எம்.பி., எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவளிப்பதாக உறுதி யளித்தார்.

வேலுகுமார் எம்.பி., ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலை வராகவும், தமிழ் முற்போக்குக் கூட்ட ணியின் முக்கியஸ்தராகவும் செயற் படுகின்றார்.

## ரணில்...

அந்த நபருடனேயே இந்த வேலு குமார் இன்று சென்று சேர்ந்து கரங் கோர்த்துள்ளார். வேலுகுமாரின் கட்சி தாவலின் பின்னணி என்னவாக இருக்கும் என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல."

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"என் தந்தையின் பிறந்த மற்றும் சொந்த ஊர் கண்டி. என் பாடசாலை கல்வியை நான் பெற்றதும் கண்டி. இந்தக் கண்டி மாவட்டத்தில் சுமார் 15 வருடங்களாக ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கவில்லை என்ற வரலாற்று தேவையை நிறைவேற்றவே நான், என் சொந்த உயிரையும் பணயம் வைத்து, கடும் போராட்டத்தின் மத்தியில் 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டேன். அந்தத் தேர்தலில் நான் தோல்வி அடையவில்லை. ஆனால், இனவாத வன்முறையால் எனது வெற்றி தடுத்து நிறுத்தப்பட்டது. இந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலில் எனது தேர்தல் பிரசார முகாமையாளராக இந்த வேலுகுமார் தொழில் செய்தார்.

நான் 2010 ஆம் ஆண்டு கண்டியில் போட்டியிட்ட போது எனக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறை கண்டி மாவட்ட தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி கண்டி தமிழ் மக்களின் கண்களை அடுத்து வரும் ஆண்டுகளில் திறந்தது. அதையடுத்து நடைபெற்ற தேர்தல்களில், எமது கட்சியின் சார்பில் கண்டியில், வேலுகுமாரை போட்டியிடச் செய்து வெற்றி பெற வைத்தோம். கண்டி மாவட்ட வாழ் சகோதர தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மனசார முன்வந்து இவருக்கு ஒரு விருப்பு வாக்கை வழங்கி எமக்கு உதவினார்கள்.

தற்போது என்ன நிகழ்ந்துள்ளது? 2010ஆம் ஆண்டு தேர்தலில் எமக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட அந்த நபருடனேயே இந்த வேலுகுமார் சென்று சேர்ந்து கரங்கோர்த்துள்ளார். இதன் மூலம் இவரை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்ற கட்சி, தலைமை, வாக்களித்த மக்கள் என அனைவரின் முகங்களிலும் இவர் கரி பூசியுள்ளார். இவரது கட்சி தாவலின் பின்னணி என்னவாக இருக்கும் என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல. ரணில் விக்கிமசிங்க என்ற நொண்டிக் குதிரையுடன் சேர்ந்துள்ள கண்டிக் கழுதையே வேலுகுமார்.

இலங்கை அரசியல் கட்சிகளின் வரலாற்றில் நிகழும் இத்தகைய துரோகங்களில், இது முதலாவதும் அல்ல. கடைசியாக இருக்கப்போவதும் இல்லை. ஆனால், இவர் இன்று செய்துள்ள செயல், மிகப் பெரிய வரலாற்றுத் துரோகம். இந்த வேலுகுமார், வரலாற்றுக் குப்பைத் தொட்டியில் விழுந்து விட்ட குப்பை. இத்தகைய துரோகிகளை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. மன்னிக்கக்கூடாது. எனது வரலாற்றில் துரோகிகளுக்கு மன்னிப்பு என்பது இல்லை. துரோகிகளுக்கு அதிர்ச்சிதான் காத்திருக்கின்றது.

கண்டி மாவட்ட மக்கள் துணையுடன் இவருக்கு மறக்க முடியாத பாடத்தை நாம் கற்றுத் தருவோம். இவருக்குப் பாடம் கற்றுத் தருவதுடன், கண்டி மாவட்டத்தின் மீதான எமது உரிமையையும் நாம் நிலைநாட்டுவோம். எமது அரசு வெல்லும். எமது காலமும் வெல்லும். அரச பலத்துடன் கண்டியில் நாம் நிச்சயம் களம் இறங்குவோம். அப்போது வரலாறு திரும்பும்." – என்றார்.

## ஜனாதிபதித்...

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன்பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்துள்ளது. அனைவருக்கும் நன்றி. நீதியான முறையில் தேர்தலை நடத்த வேட்பாளர்கள் ஒத்துழையுங்கள்.

தாக்கல் செய்யப்பட்ட 39 வேட்பு மனுக்களில் 3 வேட்பு மனுக்கள் மீது முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் மூன்றும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சமூக வலைத்தளங்கள் ஊடாக தவறான மற்றும் வெறுப்பூட்டும் சித்தரிப்புக்களுடனான பிரச்சாரங்களை மேற்கொள்வதைச் சிவில் பிரஜைகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் விசேட சலுகை வழங்கும் ஊடகங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும். வேட்பாளர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப் பைக் கருத்தில் கொண்டு தேர்தல் பிரச்சா ரங்களுக்குப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய வற்றைப் பயன்படுத்து வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்." – என்றார்.

## தமிழ்ப் பொது...

பா.அரிய நேத்திரனுக்குத் தேர்தல் சின்னம்'சங்கு'என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் மற்றும் சமூக மட்ட சிவில் அமைப்புகள் இணைந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கியுள்ளன.

அந்தவகையில், சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் வேட்புமனுப் பத்திரம் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் சின்னமும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# திருக்கோவிலில் இல்மனைற் அகழ்வு; பொதுமக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தின் கரையோர திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் இன்மனைற் அகழ்வதற்கான கள விஜயத்தை மேற்கொண்டுவந்த அதிகாரிகளிடம்பொதுமக்கள்பாரியஎதிர்ப்பை தெரிவித்தனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை (12) திருக்கோவில் விநாயகபுரம் கோரைக் களப்பு முகத்துவாரப் பகுதியில் இடம்பெற்றது.

திங்கட்கிழமை அதிகாலை இல்மனைற் அகழ்வுக்கு பொறுப்பான தம்சிலா எக்ஸ்போர்ட் கம்பனி நிர்வாகிகளும் ஊழியர்களும் முகத்துவாரத்தில் கூடினர்.

கள ஆய்வுக்கான இயந்திரம் மற்றும் உபகரணங்களும் கொண்டு வரப்பட்டன.

அங்கு இல்மனைற் அகழ்வதற்கான சாத்தியவளஅறிக்கை தயாரிப்பதற்காக இந்தக் குழுவினர் வந்திருப்பதாக தகவல்கள் காட்டுத்தீ போல் பரவியது.

ஒரு சில நிமிடங்களில் பொது மக்களும் குவியத் தொடங்கினர்.

அதேவேளை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சட்டத்தரணி கே.ஜெயசுதன் ஆகியோரும் இங்கு வருகை தந்திருந்தனர்.

இதற்கு பிரதேச சபை அனுமதி பெறப்பட்டதா? என்பதை அறியச் சற்று நேரத்தில் பிரதேச சபையின் செயலாளர் திருமதி ஜெயந்தி வீரபத்திரன வரவழைக்கப்பட்டார். அதன் பின்பு அங்கு பேச்சு இடம்பெற்றது.

அங்கு குறிப்பிட்ட சிலரே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனைய பொது மக்கள் சுமார் 500 மீற்றருக்கு அப்பால் பொலிஸாரால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு குறிப்பிட்ட கம்பனி நிர்வாகி கூறுகையில்,

நாங்கள் இங்கே இல்மனைற் அகழ்வுக்காக வரவில்லை. அது தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவே வந்திருக்கிறோம். அகழ்வு என்றால் பிரதேச சபையில் நாங்கள் அனுமதி பெற வேண்டும். ஆனால் இது ஆய்வு. எனவே பிரதேச சபை அனுமதி தேவையில்லை. நேரடியாகக் கரையோரம் பேணல் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதி பெற்று வந்திருக்கின்றோம்.– என்றார்.

அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சட்டத்தரணி ஜெயசுதன் ஆகியோர் கூறுகையில்,

மக்கள் விரும்பாத முயற்சியை நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள். நாங்கள் அதாவது பொது மக்கள் இதனைக் கடந்த நான்கு ஆண்டுகளாக முற்றாக எதிர்த்து வந்திருக்கின்றனர். இந்த நிலையில் இப்பொழுது தேர்தல் காலம். எனவே இப்படியான வேளையில் இந்தச் சம்பவம் இன முரண்பாடுகளை, குழப்பங்களைத் தோற்றுவிக்கலாம். எனவே இந்த முயற்சியைக் கைவிடுங்கள். எமக்கு இந்த அகழ்வு மற்றும் ஆய்வு தேவையில்லை. இதனை நிறுத்தி விட்டு நீங்கள் பாதுகாப்பாக வெளியேறுங்கள்.– என்றனர்.

கரையோரம் பேணல் மற்ற கரையோர மூலவளமுகாமை திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆய்வுக்கான அனுமதியை வழங்கியுள்ளார் என்று ஆவணம் காண்பிக்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு எமது பிரதேசத்துக்கு ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று வந்து எமக்குத் தெரியாமல் இல்மனைற் அகழ்வுப் பணிக்கான ஆரம்ப வேலையை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

அப்போது பொது மக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்ப்புத் தெரிவித்தனர். அதுமட்டுமல்ல மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் ஊர்வலத்தை நடத்தி பிரதேச செயலரிடம் மகஜரும் கையளித்தோம். அத்துடன் அத்திட்டம் கைவிடப்பட்டது.

திருக்கோவில் பிராந்தியத்தில் இன்மனைற் அகழ்வதற்கு மக்கள் எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர். திருக்கோவில் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபைக்கு ஏகப்பட்ட முறைப்பாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து கிடைக்கப் பெற்றுள்ளன. பிரதேச சபையில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் எமக்குத் தெரியாமல் மக்களுக்கு அறிவிக்காமல் இங்கு இன்று மீண்டும் வந்து செய்கின்ற வேலைக்கு நாம் பூரண எதிர்ப்பை தெரிவிக்கிறோம்.

எந்தக் காரணம் கொண்டும் திருக்கோவில் பிரதேசகனியவளத்தை சூறையாட அனுமதிக்கமாட்டோம் என்று அங்கு சமூக ஆர்வலர் ஒருவர் கூறினார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அபூர்வ வாய்ப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போல இந்த முறையும் 39 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.

ஆயினும் களத்தில் நேரடிப் போட்டி என்னவோ நான்கு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் இடையே மட்டும்தான்.

சுயேச்சையாக காஸ் சிலிண்டர் சின்னத்தில் களமிறங்கியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கா மற்றும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகிய நால்வருமே அவர்கள்.

இந்த நால்வருமே இந்தத் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளே தீர்மானகரமானவை என்றுணர்ந்தோ என்னவோ பௌத்த, சிங்கள மேலாதிக்கப் போக்கை - பேரினவாத வெறிப்போக்கை - இன்னும் கையில் எடுக்கவில்லை. இனியும் இத்தேர்தலில் அதை அவர்கள் கையில் எடுக்கப் போவதில்லை என்பதுதான் கள யதார்த்தமாகும்.

இந்தப் பின்புலத்தில் சிறுபான்மையினரான வடக்குக் கிழக்குத் தமிழர்கள் இந்தத் தேர்தலை எப்படி அணுகுவது என்ற கேள்வி எழுகின்றது.

இது விடயத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆக்கபூர்வமான - யதார்த்தபூர்வமான - நியாயமான - ஓர் ஆலோசனையை தமிழர் தரப்புக்கு முன்வைத்திருக்கின்றார்.

"இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்றுக்கு தென்னிலங்கைத் தரப்புகளைச் சம்மதிக்கச் செய்வதற்கான முயற்சியாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவருடனும் திறந்த மனதுடன் பேச்சுக்களை நடத்துங்கள்" - என்று அவர் தமிழர் தரப்புகளுக்கு - தமிழ்த் தலைவர்களுக்கு - ஆலோசனை கூறியிருக்கின்றார்.

"இனவாதம் தலை எடுக்காத இந்தத் தேர்தல் சமயம்தான் எல்லாத் தரப்பினருடனும் திறந்த மனதுடன் பேசுவதற்கு மிகப் பொருத்தமான காலம். எல்லா வேட்பாளர்களுடனும் நிபந்தனை ஏதுமின்றிப் பேசுங்கள்.

"அவர்களை இணங்க வைக்க முயலுங்கள். அப்படிப் பேசுபவர்களில் யார் தீர்வுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை நீங்கள் அடையாளம் கண்டு, அவர்களை ஆதரிக்கும்படி உங்கள் மக்களை நீங்கள் வழிபடுத்தலாம், அது இறுதி நேரத்தில் செய்ய வேண்டியது.

"இப்போது நீங்கள் எல்லோருடனும் மனம் விட்டுப் பேசுங்கள். பொதுவாக இணங்கக் கூடிய விடயங்களை அடையாளம் காணுங்கள்.

"தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில்ஒவ்வொரு வேட்பாளரினதும் கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்தச் செய்யும் விதத்தில் அவர்களுடனான உங்களுடைய உரையாடல் அமைய வேண்டும்.

"அப்படி அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்களாயின் தேர்தலின் பின்னர்தன்னும் தென்னிலங்கை, தேசிய இனப்பிரச்சினை விடயத்தில்ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டை எடுக்க அது உதவும்" - என்று அவர் கூறியிருப்பது இந்தச் சமயத்தில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயம்தான்.

"எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை விரும்பினால் நீங்கள் இறுதிக் கட்டத்தில் எடுக்கலாம். அதற்கு முன்னதாக இப்போது எல்லாத் தரப்பினருடனும் திறந்த மனதுடன் பேசுங்கள்" - என்ற விடயம்தான் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

தேசியத் தேர்தலில் பேரினவாதம் கிளப்பப்படாத - கிளறப்படாத - இந்தச் சமயம் முன்னெப்போதும் இல்லாமல் இப்போது அபூர்வமாகக் கிட்டும் ஓர் வாய்ப்பு. முன்னர் எவ்வேளையிலும் வராத ஒரு சந்தர்ப்பம்.

இதனை - அழகிய கோலமாக்கி வசப்படுத்திக் கொள்வதும் அல்லது அலங்கோலமாக்கி மண்ணாக்குவதும் தமிழர்களைப் பொறுத்தது.



# குப்பைகள் அகற்றப்படாமையால் பொது மக்கள் பெரும் சிரமத்தில்

(ஸ்ரீனிவாசகம் ரவீந்திரன்)

இரத்தினபுரி நகரில் ஆங்காங்கே காணப்படும் குப்பைகள் முறையாக அகற்றப்படுவது இல்லை என்று பொது மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

டெங்கு நோய் தீவிரமாக பரவி வரும் இக்காலப் பகுதியில் குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தாது இரத்தினபுரி மாநகர சபை அசமந்த போக்கைக் கடைப்பிடித்து வருவதால் குப்பைகள் நிறைந்து துர்நாற்றம் வீசுகின்றன.

இதனால் வீதியில் நடந்து செல்வதற்குக் கூட முடியாதுள்ளது. சில பாடசாலைகளுக்கு அருகில் கூட இவ்வாறு குப்பைகள் நிறைந்து துர்நாற்றம் வீசிய வண்ணம் காணப்படுகின்றன.

இதனால் இவ்வீதியை பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சொல்லொனா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்து இரத்தினபுரி மாநகர சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தும் எவ்வித பயனுமில்லை என்று பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# ஆசிரியர் உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான தடை நீக்கப்பட்டாலே பரீட்சை நடக்க வாய்ப்பு

## முன்னள் எம்.பி. கணபதி கனகராஜ் தெரிவிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஆசிரியர் உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான தடை உத்தரவை எதிர் வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியின் தலையிட்டால் மீள பெறப்பட்டால் மட்டுமே திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெற வாய்ப்பு இருக்கிறது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலையீட்டால் ஆசிரிய உதவியாளர் போட்டி பரீட்சைக்கான தடை உத்தரவு மீள பெறப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தை நாடித் தடை உத்தரவு பெற்றது இது இரண்டாவது முறையாகும்.

வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு சமூகமும் தமது கல்



விக்காக பல்வேறு சலுகைகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களை பெற்றிருக்கின்றன.

அல்ராஜ் பதியுதீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்தபோது எட்டாம் தரத்தில் சித்தியடைந்த முஸ்லிம்களுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுத்தார். அதேபோல சௌமிய மூர்த்தி தொண்டமான் சாதாரண தர தகைமையுடன் ஆசிரியர் நியமனங்களை பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுத்தார்.

இவ்வாறு சமூக நலனின் அடிப்படையில் கடந்த காலங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சகோதர சமூகங்கள் புரிந்துணர்வின் அடிப்படையில் இவற்றை நோக்க வேண்டும். எவ்வாறினும் பெருந்தோட்ட பிரதேச ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பதாரிகளுக்கு உதவும் நோக்கத்தில் நாம் சட்ட ஆலோசனைகளை பெற்று வருகிறோம்.

மலையகத்தை சார்ந்த சட்ட வல்லுநர்கள் ஆசிரியர் உதவியாளர் விண்ணப்பத்தாரிகளின் நலன் கருதி உதவ வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

எதிர்வரும் 17ஆம் தேதிக்கு முன்னர் ஜனாதிபதியின் தலையீட்டில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் அல்லது நாம் இந்த விடயத்தை சட்டரீதியாக எதிர்கொள்வதற்கு தயாரிப்புகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.



## தேசிய மட்ட மல்யுத்தத்தில்

# தங்கம்



(எம்.எம்.ஜெஸ்மின்)

தேசிய மட்ட மல்யுத்தத்தில் தங்கம் வென்ற மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி தங்கமகன் பிருந்திகன் கல்வி சமூகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

இலங்கை பாடசாலை மல்யுத்த சங்கத்தால் அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமான 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 97 கிலோ கிராம் எடைப் பிரிவில் பங்கு பற்றி மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி மாணவன் பிருந்திகன் தங்கப் பதக்கம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியில் மிகவும் சிறப்பாக நடை பெற்றது.

# நிறுத்தல், அளவைக்கு முத்திரையிடல்





(பாறுக் ஷிஹான்)


அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளதும் உபாயங்கள தும் பிரிவால் பல்வேறு தராசுகளை பரிசோதனை செய்து சரி பார்க்கும் சான் றிதழ் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

கல்முனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கல்முனை, மருதமுனை, நற் பிட்டிமுனை, பெரியநீலவணை ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுத்தல், அளவை உபகரணங்களை 2024 – 2025 ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதற்கான வெசயற்பாடு கள் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிரதேச செயலக வளாகத் தில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அறிவித்துள்ளார்.

வர்த்தகர்கள், மீனவர்கள் தங்களு டைய நிறுத்தல், அளவை உபகர ணங்களை கொண்டு சென்று முத் திரையிட்டுக் கொள்ளுமாறு கல்முனை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதன் போது இலத்திரனியல் தராசு கள், பாரம்பரிய தராசுகள், நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரி பார்க் கப்பட்டு சீல் செய்யப்பட்டு தரச் சான்றி தழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# கல்விச் சாதனையாளர்கள் 100 பேர் காரைதீவில் பாராட்டிக் கௌரவிப்பு!

காரைதீவில் கல்விச் சாதனையாளர்கள் 100 பேர் தங்கப்பதக்கம் அணிவித்து, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்தக் கௌரவிப்பு விழா, சித்தருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜை நிகழ்வில் இடம்பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) மாலை ஆலய பரிபாலன சபை தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் சித்தானைக்குட்டி கலையரங்கில் நடைபெற்றது.

சிறப்புரையை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா வழங்கினார்.

இந்த விழாவில் கடந்த வருடம் இடம்பெற்ற தரம் 6 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற மாணவர்கள், மற்றும் உயர்தரப் பரீட்சை சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்கள் என 100 மாணவர்கள் சித்தானைக்குட்டி கலையரங்கத்தில் பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் அதிதிகளாக கலந்து சிறப்பித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா மன்னார் மாவட்ட பிரதம பொறியியலாளர் ரி. சுரேந்திர-குமார் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபை செயலாளர் இ.விஜயரெத்தினம் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.



# வருடாந்த பெருந்திருவிழா

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வடக்கு முருகையா ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (18) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 16 நாள்கள் உற்சவங்கள் இடம் பெறும்.

இந்தப் பெருந்திருவிழாவில் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன திருவிழாவும், 28ஆம் திகதி புதன்கிழமை வசந்தோற்சவமும், 29 ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கல்யாணமும், 30ஆம் திகதி வெள்ளிக் கிழமை வேட்டைத் திருவிழாவும், 31 ஆம் திகதி சனிக்கிழமை சப்பர உற்சவமும், 01 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரதோற்சவமும், 02 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம் பெறும்.





# 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு வவுனியாவில் ஏலம்போன மாம்பழம்



**(கே.வசந்தன்)**

வவுனியா உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் போது மாம்பழம் ஒன்று 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

உக்குளாங்குளம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவத்தின் 06 ஆம் நாள் மாம்பழ திருவிழா நேற்று (14) இடம்பெற்றபோது விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது.

இதன்போது, பலத்த போட்டிக்கு மத்தியில் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு குறித்த மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

இந்த மாம்பழத்தை வவுனியா, உக் [illegible] தார்.





# அட்டாளைச்சேனை மாணவர்களுக்கு சிகை அலங்காரம் பற்றிய செயலமர்வு

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களின் சிகை அலங்காரம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் கடை உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் பிரதேச செலாளர் நஹிஜா முசாபிர் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.



இதில் கோட்டக்கல்வி அதிகாரி எம்.எச்.எம்.றஸ்மி, சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் ஏ.எம்.கஸ்பியா, வீவி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர். எஸ். சியாத், கலாசார உத்தியோகத்தர் எம். ஜஃபர், மகளிர் அபிவிருத்தி உதவியாளர் எஸ். எம். எஸ். பர்ஹானா, உளவள துணை உதவியாளர் எம்.றனீஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தென்மராட்சி அபிவிருத்தி தொடர்பில் அங்கஜன் எம்.பி. கண்காணிப்பு விஜயம்





(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களால் பரிந்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் செவ்வாய்க்கிழமை கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது தென்மராட்சியில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக மக்களால் பரிந்துரைக்கப்பட்ட சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், பொது நோக்கு மண்டபங்கள், பாடசாலைகள் மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட 36 பொது இடங்களுக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் மேற்படி பொது அமைப்புகளுடைய மேலதிக தேவைப்பாடுகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேட்டறிந்து கொண்டார்.

அவசர தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் உரிய திணைக்களங்கள் ஊடாக முன்னெடுத்திருந்தார்.

# உள்ளூராட்சி தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காதது ஏன்?

## முன்னாள் நகரசபை உறுப்பினர் நடனதேவன் கேள்வி

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் வருடக் கணக்கில் தற்காலிக அடிப்படையில் பணி புரிகின்ற ஊழியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாதது ஏன் என்று சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ம.நடனதேவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளில் சுமார் 10 வருடங்களாக தற்காலிக அடிப்படையில் பணி புரிகின்ற ஊழியர்களுக்குக் கூட இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலை காணப்படுகிறது.

அண்மையில் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் அவ்வாறு நீண்ட காலமாக தற்காலிகமாக பணிபுரிகின்ற ஊழியர்களுடைய சுய விவரக் கோவைகள் பெறப்பட்ட போதிலும் இன்றுவரை அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. வடக்கு மாகாணத்தில் யாழ். மாநகரசபையில் தற்காலிக அடிப்படையில் பணி புரிந்த ஊழியர்களுக்கு மாத்திரமே அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தென் இலங்கையில் நகர மற்றும் பிரதேச சபைகளில் தற்காலிக அடிப்படையில் பணி புரிந்தவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.அதேபோல் வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தற்காலிக பணியாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என மேலும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இரு டிப்பர் சாரதிகளுக்கு மறியல்

(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் செவ்வாய்க்கிழமை காலை கொடிகாமம் பொலிஸாரால் மடக்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கொடிகாமம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் சிவலிங்கம் பிரபாகரன் தலைமையில் கீழ் கொடிகாமம் பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவு பொறுப்பதிகாரியான தினேஸ் குணதிலகவுடன் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகளான எஸ். ஐ. டிலான் சேமசிங்க, வியஜரட்ன மற்றும் தேவதாஸ் ஆகியோரால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# லைக்கா ஞானம் ஏற்பாட்டில் கண்டி பெரஹறாவுக்கு குடிதண்ணீர்

(நடராஜா மலர்வேந்தன்)

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கண்டி எசல பெரஹரா காலப் பகுதியில் பக்தர்களின் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான குடிநீர் விநியோக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டி மாநகர சபையினரிடம் 25 குடி தண்ணீர்த் தொட்டிகள் வழங்கப்பட்டு, முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டன.

பெரஹறா நாள்களில் கலந்து கொள்ளும் லட்சக் கணக்கிலான மக்களின் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிநடத்தலில் லைக்கா ஞானம் அறக்கட்டளையானது நாடளாவிய ரீதியில் சமுதாய குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.





# சதுரங்கத் துறையில் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நியூசிலாந்து நாட்டில் கிறைஸ்ட்சர்ச் நகரில் சுவிஸ் முறையில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டியில் புரோ நைட்ஸ் செஸ் அகடமி மாணவர்கள் இருவர் பங்குபற்றி இருந்தனர்.

அதில் 10 வயது பிரிவில் 5 போட்டிகளில் ஐந்து வெற்றிகளையும் பெற்று முதலாவது இடத்தை அஞ்சுலன் ஜெகனேந்திரன் எனும் மாணவனும், 13 வயது பிரிவில் மூன்றாவது இடத்தை ஆரங்கன் ஜெகனேந்திரன் என்ற மாணவனும் பெற்று அடுத்து இடம் பெறும் தேசிய ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யபட்டுள்ளனர்.





# மண்முனை வடக்கு பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 58 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி சுசிகலா அருள்தாஸ் தலைமையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுதலைவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சி.சந்திரகாந்தன் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட குறித்த பயனாளிகள் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக் கடிதங்களைக் கையளித்திருந்தார்.

இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட 103 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டு கழகங்கள் விளையாட்டுத்துறை சார் பயிற்சி நிலையங்களுக்கான உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

பொருளாதார நலிவு நிலை காரணமாக தமது சுய தொழில்களை முன்னெடுப்பதில் வள பற்றாக்குறைகளை எதிர்கொண்டு வந்த தொழில் முயற்ச்சியாளர்களுக்கான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும், கட்சியின் தேசிய அமைப்பாளருமான தம்பிராசா தஜீவரன், கட்சியின் இளைஞரணி செயலாளர் சண்முகலிங்கம் சுரேஷ்குமார், மண்முனை வடக்கு பிரதேச குழு தலைவர் காந்தராசா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தோட்டத் தொழிலாளர் தொடர்பில் ஹட்டனில் விழிப்புணர்வு நாடகம்

(மஸ்கெலியா நிருபர்)

தலவாக்கலை பாடசாலை நடைமுறைக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில், தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகள் தொடர்பில் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று (14) ஹட்டனில் வீதி நாடகம் ஒன்று நடத்தப்பட்டது.




இது தொடர்பில் பாடசாலையின் அதிபர் டொமினிக் சந்தனம் தெரிவித்ததாவது, தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்றும் தோட்டத் தொழிலாளர்களின் சில குடும்பங்கள் பட்டிக்குள் அடைக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் பொருளாதாரப் பிரச்சினையால் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பெருந்தோட்டப் பிள்ளைகள் பலர் தமது குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தமது கல்வியை இடையில் நிறுத்திவிட்டு தோட்டங்களை விட்டு வெளியில் சென்று குறிப்பாக கொழும்பு போன்ற பகுதிகளுக்குச் செல்கின்றனர்.

இந் நிலைமையை மக்களுக்கு உணர்த்தும் வகையில் இந்த வீதி நாடகங்களை அரங்கேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது .- என்றார்.



## 2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா

# வல்லரசு

## உருவாக்கப்படும் என சுதந்திர தின உரையில் மோடி தெரிவிப்பு



"உலகின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும். நாட்டு மக்கள் பாரதத்துக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும். 2047க்குள் வளர்ச்சியடைந்த - வல்லரசாக பாரதத்தை உருவாக்கலாம்." - என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினத்தையொட்டி டில்லி செங்கோட்டையில் 11ஆவது முறையாக தேசியக் கொடியை ஏற்றிய பிரதமர் நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

அந்த உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசத்திற்காக தியாகம் செய்த எண்ணற்ற தியாகிகளுக்கு இன்று அஞ்சலி செலுத்தும் நாள். இந்த நாடு அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது பிரிட்டிஷ் அரசை எதிர்த்து 40 கோடி மக்கள் இரத்தம் சிந்தி நமக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தனர். இன்று 140 கோடி மக்களாக இருக்கும் நாம் ஒன்றுபட்டால் 2047 க்குள் வளர்ச்சியடைந்த - வல்லரசாக பாரதத்தை உருவாக்கலாம்.

இந்த ஆண்டும், கடந்த சில ஆண்டுகளாகவும் அதிகரித்து வரும் இயற்கைப் பேரிடர்கள் நம்மை கவலைகொள்ளச் செய்கின்றன. இயற்கைப் பேரிடரில் பலர் தங்கள் சொந்தங்களை, சொத்துக்களை இழந்துள்ளனர். தேசமும் நஷ்டத்தைச் சந்தித்துள்ளது. இன்று, அவர்கள் அனைவருக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நெருக்கடியான நேரத்தில் இந்த தேசம் அவர்களுடன் நிற்கின்றது என்று நான் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன்.

உலகின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும். நாட்டு மக்கள் பாரதத்துக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும்" - என்று தெரிவித்தார்.





## கொல்கத்தா பெண் வைத்தியரின் கொலையைக் கண்டித்த போராட்டத்தில்

# வன்முறை

பெண் வைத்தியர் கொலையைக் கண்டித்து கொல்கத்தாவில் நடந்த போராட்டம், வன்முறையாக மாறியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் தடியடி நடத்தினர்.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 8ஆம் திகதி இரவு பயிற்சி பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் சஞ்சய் ராய் என்ற வாலிபரை பொலிஸார் கைது செய்தனர். வைத்தியசாலையில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகள் மூலம் நடத்தப்பட்ட விசாரணையில் சஞ்சய் ராய் பொலிஸாரிடம் சிக்கினார்.

இந்தக் கொலையை கண்டித்து நாடு முழுவதும் வைத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதைத் தொடர்ந்து ஆர்.ஜி.கர் மருத்துவக்கல்லூரி முதல்வர் சந்தீப்கோஷ் தனது பதவியை ராஜினாமாச் செய்தார். இந்நிலையில் வழக்கு விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கிடையே பயிற்சிப் பெண் வைத்தியரின் கொலையைக் கண்டித்து நேற்று நள்ளிரவுவரை போராட்டம் நீடித்தது. அப்போது திடீரென இந்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. வைத்தியசாலையில் உள்ள அவசர சிகிச்சை வார்டுக்குள் புகுந்த சிலர் அங்கிருந்த பொருட்கள் உட்பட வார்ட் முழுவதையும் அடித்து நொருக்கி சேதப்படுத்தினர்.

வைத்தியசாலை வளாகத்திற்குள்ளும் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் வன்முறையைக் கட்டுப்படுத்த தடியடி நடத்தினர். மேலும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி கூட்டத்தை கலைக்க முயன்றனர்.

அப்போது கும்பல் கற்களை வீசித் தாக்கியதில் பொலிஸார் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. மேலும் வைத்தியசாலைக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு கும்பல் தீ வைத்து எரித்தது. 2 பொலிஸ் வாகனங்களையும் கும்பல் அடித்து நொருக்கியது.

இதனால் வைத்தியசாலைப் பகுதியில் பதற்றம் நிலவியது. சம்பவ இடத்தில் கலவரத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டு ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரிகள் கூறுகையில், "அடையாளம் தெரியாத கும்பல் திடீரென மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்தது. அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றோம். ஆனால், முடியவில்லை. கும்பல் மருத்துவமனைக்குள் புகுந்து சூறையாடியது" என்றனர்.






## ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் போர்

# உக்கிரம்!

## இடைவிடமல் தாக்கும் உக்ரைன் இராணுவம்

## திருப்பி அடிக்க ஆரம்பித்தது ரஷ்யத் தரப்பு

## 420 உக்ரைன் படையினர் பலி எனத் தகவல்



ரஷ்யாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி வரும் உக்ரைன் இராணுவத்துக்கு எதிரான தாக்குதலை, ரஷ்ய இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளமையால், இரு தரப்புக்கும் இடையில் கடும் போர் மூண்டுள்ளது.


இதுவரை 420 உக்ரைன் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்துக்குள் உக்ரைன் இராணுவம் புகுந்து தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி கடும் சேதத்தை ஏற்படுத்தியது.

அதேவேளை, ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் உக்ரைன் இராணுவம் தொடர்ந்து முன்னேறி வருகின்றது எனவும், 74 குடியிருப்புப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் எனவும் என உக்ரைன் அறிவித்தது.

இந்நிலையில், தற்போது ரஷ்ய இராணுவம் திருப்பி அடிக்க ஆரம்பித்துள்ளது. குர்ஸ்க் பிராந்தியத்துக்குள் ஊடுருவியுள்ள உக்ரைன் இராணுவத்துக்கும் ரஷ்ய இராணுவத்துக்கும் இடையில் நடந்துவரும் சண்டையில் இதுவரை 420 உக்ரைன் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என ரஷ்ய பாதுகாப்புத் தரப்புத் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன், குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் இராணுவத்தால் ஏவப்பட்ட 4 ஏவுகணைகளை ரஷ்யா தாக்கி அழித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## சர்வதேச சுகாதார அவசர நிலையாக குரங்கம்மை

# பிரகடனம்!

ஆபிரிக்க நாடுகளில் பரவிவரும் குரங்கம்மையை சர்வதேச சுகாதார அவசரகால நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பில், “குரங்கம்மைக் காய்ச்சல் பொது சுகாதார அவசரகால நிலையாக உருவாகியுள்ளது. 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதனால், இதனைத் தடுத்து நிறுத்த சர்வதேச உதவி வேண்டும்” எனக் கேட்டது.

இதேவேளை, கொங்கோவில் இருந்து புதிய வைரஸ் ஒன்று புரூண்டி, கென்யா, ருவாண்டா மற்றும் உகாண்டா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளது.

இந்த சூழலில் உலக சுகாதார அமைப்பு, குரங்கம்மையை சர்வதேச சுகாதார அவசரகால நிலையாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேசஸ் கூறும்போது,

“நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விடயம். இந்த வைரஸானது ஆபிரிக்காவைக் கடந்து பரவக் கூடிய ஆற்றல் படைத்துள்ளது என்பது அதிக வருத்தத்திற்குரியது” என்று கூறியுள்ளார்.

நடப்பு ஆண்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் என குரங்கம்மை தொற்றுக்குள்ளானவர்கள் 13 நாடுகளில கண்டறியப்பட்டுள்ளனர்.

கண்டறியப்பட்ட நாடுகளில் கொங்கோவில் 96 சதவீதம் அளவுக்குப் பாதிப்புகளும் மற்றும் மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, கொங்கோவில் பாதிப்புகள் 160 சதவீதமும், மரணங்கள் 19 சதவீதமும் உயர்ந்துள்ளன.

இதுவரை 524 பேர் பலியாகியுள்ளனர். 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 8

# கனடா முரசு

வியாழக்கிழமை 15/08/2024

## சூட்டுச் சம்பவங்களில் இருவருக்குக் காயம்!

கனடாவின் டொரன்டோ பீல் பிராந்தியத்தில் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

விமான நிலைய வீதி C2▶



# தீவிரவாதச் சந்தேக நபர்கள் இருவருக்கு குடியுரிமை வழங்கப்பட்டமை எங்ஙனம்?

## விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றக் குழு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 15

தீவிரவாத சந்தேக நபர்களுக்கு எவ்வாறு கனடிய குடியுரிமை வழங்கப்பட்டது என்பது குறித்து விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றக் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ரெறான்ரோவில் தீவிரவாத தாக்குதல் நடத்த ஆயத்தமாகி இருந்த இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர். C2▶

# இரண்டு கிலோமீட்டர் நடைபாதைக்கு 150 மில்லியன் டொலர்கள் செலவா?



ஒன்ராரியோ, ஓகஸ்ட் 15

டொராண்டோவின் மேற்கு முனையில் உள்ள ரொன்செஸ்வால்ஸில் இருந்து லிபர்ட்டி கிராமத்திற்கு நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டும் பாதையின் இரண்டு கிலோமீட்டர் நீடிப்பு திட்டத்துக்கு 150 மில்லியன் டொலர்கள் விலைக் குறிக்கப்பட்டுள்ளமை பலரது புருவத்தையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி உயர்த்த வைத்திருக்கின்றது.

‘அது நடக்க வேண்டும் என்று நாங்கள் அனைவரும் விரும்புகிறோம், ஆனால் மெட்ரோலின்க்ஸின் 150 மில்லியன் விலைக் குறிப்பு முற்றிலும் நியாயமற்றது,’ நகர சபை உறுப்பினர் ஜோஸ் மட்லோ தெரிவித்துள்ளார்.

மேற்கு டொராண்டோ ரயில் பாதையானது தி ஜங்ஷனில் உள்ள ரயில் நடைபாதையானது நடைபயிற்சி, ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டுதல் ஆகியவற்றிற்கான 2.1 கிலோமீட்டர் பாதையாகும்.

இது 2008/09 இல் வெறும் 3.8 மில்லியன் டொலர் செலவில் திறக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட மேற்கு டொராண்டோ ரயில்பாதை விரிவாக்கமானது, ஸ்டெர்லிங் சாலையில் உள்ள டன்டாஸ் தெரு மேற்கில் இருந்து லிபர்ட்டி கிராமத்திற்கு வடக்கே உள்ள சட்பரி தெருவில் உள்ள ஏபெல் தெரு வரை மேலும் இரண்டு கிலோமீட்டர் தூரத்தை சேர்க்கும்.

ரயில் பாதைகளை கொண்டு செல்லும் மெட்ரோலின்க்ஸால் இந்த திட்டம் கட்டப்படுகிறது, ஆனால் நகரமும் மத்திய அரசாங்கமும் இதற்கு நிதியளிக்கின்றன.

மத்திய அரசாங்கம் 23 மில்லியன் டொலர்களையும், நகர சபை 125.7 மில்லியன் டொலர்களையும் ஒதுக்கியுள்ளது.




# குரங்கம்மைக்குத் தடுப்பூசி செலுத்துமாறு ஆலோசனை

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 15

டொராண்டோவில் குரங்கம்மை தொற்றுக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு உள்ளதால் தகுதியுள்ள குடியிருப்பாளர்களை பரவலைக் கட்டுப்படுத்தத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு டொரன்டோ பொது சுகாதாரப் பணியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

டொராண்டோ பொது சுகாதார அமைப்பு நேற்று வெளியிட்ட செய்தி குறிப்பில், ஜூலை 31 வரை 93 உறுதிப் படுத்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள் என எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந்த காலப்பகுதியில் 21 சம்பவங்களே பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜூலை மாதத்தின் இரண்டு வாரங்களில் டொராண் டோவில் 13 புதிய தொற்றுச் சம்பவங்கள் உறுதி செய்யப்பட்டுள் என அண்மைய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.




## சூட்டுச்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்த இடத்தில் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர எனத் தெரிவிக் கப்படுகின்றது. எனினும் அவர்களில் ஒருவருக்கு சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறு காயம் ஏற்பட்ட நபர் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிரம்டனில் மற்றும் ஒரு துப்பாக்கி சுட்டு சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இந்தத் துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டெ எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## தீவிரவாதச்...

அகமத் முஸ்தபா எல்டிடி என்ற 62 வயதான நபரும், முஸ்தபா எல்டிடி என்ற அவரது 26 வயதான மகனும் இவ்வாறு ரிச்மண்ட் ஹில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டு இருந்தனர்.

இந்த இருவருக்கு எதிராகவும் ஒன்பது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லீப்பிளாங் மற்றும் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

நாடாளுமன்ற குழு இந்த இருவரிடமும் விசாரணையை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தீவிரவாத குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எவ்வாறு கனடாவில் தங்கி இருக்க அனுமதி வழங்கப்பட்டது என்பது தொடர்பில் தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஏனெனில் கனடிய மக்களுக்கு நாட்டின் குடிவரவு முறைமை தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித் துள்ளார்.

இந்த சந்தேகநபர்களில் ஒருவருக்கு குடியுரிமை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

# இலங்கையின் றொறன்ரோ துணைத் தூதரகத்துடன் தமிழர் பேரவைக்கு உறவு என்கின்றது தமிழர் கூட்டு!

ஒன்ராறியோ, ஒகஸ்ட் 15

இலங்கை அரசாங்கத்தின் துணைத் தூதரகம் மற்றும் கனடியத் தமிழர் பேரவைக்கும் இடையிலான உறவினை அம்பலப்படுத்துவதாக கனேடியத் தமிழர் கூட்டு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனேடியத் தமிழர் கூட்டினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையானது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லியெவ், புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜெக்மீத் சிங், வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி, பழங்குடிகள் உறவுகள் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி, ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட், பிறம்டன் நகர முதல்வர் பெட்ரிக் பிறவுண், டொரன்டோ நகர முதல்வர் ஒலிவியா சோவ் மற்றும் கனடாவிலும், அதற்கு அப்பாலும் உள்ள தமிழர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

Toronto வில் உள்ள இலங்கையின் துணைத் தூதரக அதிகாரி Thushara Rodrigo, Brampton நகர முதல்வர் Patrick Brown னுக்கு, மே 3, 2024 அன்று அனுப்பி, கனேடியத் தமிழர் கூட்டினால் ('கூட்டு') அவர்களிடம் இருந்து தற்போது பெறப்பட்டுள்ள கடிதம், கனடியத் தமிழர் பேரவைக்கும் (CTC), இலங்கை அரசு மற்றும் Toronto வில் உள்ள இலங்கை அரசின் துணைத் தூதரகம் ஆகியவற்றுக்கிடையிலான உறவு குறித்த உண்மையை அம்பலப்படுத்துகிறது. இலங்கை அரசாங்கத்துடனான அனைத்துத் தகவல் தொடர்புகளையும் பகிரங்கப்படுத்துமாறு 'கூட்டு' விடுத்த கோரிக்கைக்கு CTC இதுவரை பதிலளிக்கவில்லை. மே 3, 2024 அன்று அனுப்பப்பட்ட துணைத்தூதரது கடிதம், இத்தரப்புக்களின் உறவு தொடர்பில் குறிப்பிடத்தக்க புரிதலை வழங்குகிறது.

நகர முதல்வர் Patrick Brown னுக்கு எழுதிய இக்கடிதம், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எவ்வாறு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை வலியுறுத்த முனைகிறது. தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை (Brampton இல்) அமைப்பதற்கு முதல்வரால் அளிக்கப்படும் எந்த ஒரு உதவியும், அத்தகைய நல்லிணக்கத்தையும், அமைதியையும் பாதிக்கும் என பல தவறான தரவுகள் மற்றும் வலியுறுத்தல்கள் ஊடாக, இந்தக் கடிதம் எச்சரிக்கிறது. மேலும், தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பது, இலங்கையில் CTC போன்ற தமிழ் அமைப்புகளால் எடுக்கப்படும் முயற்சிகளையும் தடம்புரளச் செய்யும் எனவும் அந்தக் கடிதம் எச்சரிக்கிறது.

குறிப்பாக, கனடியத் தமிழர் பேரவை, கொழும்பில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகராலயத்தின் பங்கேற்புடன் இலங்கையில் தமது மனிதாபிமான நடவடிக்கைகளை ஆரம்பித்ததை நீங்கள் அறிந்திருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டி, நல்லிணக்க முயற்சிகளை ஆதரிப்பதற்காக இமயமலைப் பிரகடனக் கட்டமைப்பின் கீழ், பௌத்த பிக்குகளுடன் CTC முக்கியமான ஈடுபாடுகளைக் கொண்டிருந்தது எனவும் Rodrigo கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

இந்தக் கடிதம் பின்வருவனவற்றை தெளிவுபடுத்துகிறது:-

தமிழ் மக்களின் நீதி மற்றும் சுதந்திரத்திற்கான போராட்டத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் உத்திகளில் தமது பங்கை CTC தீவிரமாக மூடி மறைத்து, தமிழ் மக்களைத் தவறாக வழிநடாத்தியுள்ளது.

இமாலயப் பிரகடனத்துடன் தொடர்பில்லை என CTC மறுத்தாலும், இந்தக் கடிதம் உண்மையை அம்பலப்படுத்துகிறது. CTC தவிர, வேறு எந்த அமைப்பும் இந்தப்பணியை மேற்கொள்வதாவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. மிக முக்கியமாக, Brampton நகரில் இனப்படுகொலை நினைவுச்சின்னம்அமைக்கப்படுவதை எதிர்க்க CTC பயன்படுத்தப்படுகிறது என்பதை இந்தக் கடிதம் வெளிப்படுத்துகிறது. தமிழர் வரலாற்றை அழிக்கவும், போரில் இறந்தவர்களை நினைவு கூருவதைத் தடுக்கவும், இலங்கையுடன் இணைந்த CTC யின் பணிகள் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றன. CTC இன் நடவடிக்கைகள், கனடாவில் இலங்கையின் வெளிநாட்டுத் தலையீட்டுக்குத் துணைபோவதோடு, கனடாவில் உள்ள தமிழர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை மலினப்படுத்துகிறது.

இலங்கையுடனான CTC யின் கூட்டுறவானது, தமிழ் இனப்படுகொலையை மூடிமறைத்து, அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த தவறான புரிதலை உருவாக்கி, தமிழர்களின் உண்மையான வரலாறு மற்றும் தொடரும் போராட்டங்களைப் புறக்கணிக்கும் அரசின் திறனை வலுப்படுத்துகிறது.

இலங்கை அரசாங்கம் தனது சொந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்காக CTC யின் முயற்சிகள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதை இந்தக் கடிதம் அம்பலப்படுத்தியுள்ளது. தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியின் நிர்மாணத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கில், கனடாவில் மக்கள் தொடர்பு பிரச்சாரத்தை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் CTC இன் முன் முயற்சிகளை ஒரு கவசமாகப் பயன்படுத்தியுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நயவஞ்சக மூலோபாயம், தமிழ்ச் சமூகத்தின் நியாயமான மனக்குறைகளை வலிமையற்றதாக்குவது மட்டுமன்றி,வரலாற்று ரீதியாக தமிழர்கள் எதிர்கொள்ளும் அநீதிகள் குறித்த உண்மைகளையும் அழிக்க முனைகிறது. இதுபோன்ற செயற்பாடுகள், நீதி மற்றும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, CTC யின் தலைமைத்துவத்தையும், பரப்புரையையும் எதிர்பார்க்கும் கனேடியத் தமிழர்களின் நம்பிக்கைக்கு இழைக்கப்படும் துரோகமாகும். புலம்பெயர்ந்த தமிழர்களின் குரல்களை மௌனிக்கவும், இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூருவதற்கும் மற்றும் மரியாதை செய்வதற்கும் தடைகளை ஏற்படுத்தும் வெளிச்சக்திகளின் பணிகளுக்கு, CTC ஒத்துழைக்க முடியாது என்பதைத் தமிழ்சமூகம் உறுதி செய்யவேண்டும்.

இனப்படுகொலையை அங்கீகரிப்பதிலும், அதில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பைச் சுட்டிக்காட்டுவதிலும் கனேடிய அரசியல்வாதிகள் மத்தியில் முன்னோடியாக விளங்கும் நகர முதல்வர் Patrick Brown க்கு நன்றியையும்,பாராட்டுகளையும் நாம் தெரிவித்துக் கொள்கிறோம். எனினும், கனடாவின் நகர முதல்வர் ஒருவர் மீது, இலங்கையின் தலையீடு என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதோடு, பிரதமர் இவ்விடயத்தை நுட்பமான ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும்.

முதலில், இலங்கை அரசாங்கம், Toronto வில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் மற்றும் CTC ஆகிய தரப்புக்களுடனான அனைத்துத் தகவற் தொடர்பாடல்களையும் வெளிப்படுத்த வேண்டும் எனக் கனேடிய

(C4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின்...

(C3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம், Ontario மாகாண அரசாங்கம், Toronto நகரம் மற்றும் Brampton நகரம் ஆகிய தரப்புக்களுக்கு 'கூட்டு' அழைப்புவிடுக்கிறது. இந்தவிடயத்தில்,தகவல் அறியும் உரிமையின் பிரகாரம், முறையான கோரிக்கை களை 'கூட்டு' ஆரம்பிக்கும் நிலையில், தமிழர்களின் நலன் சார்ந்த கோரிக்கையாக இவற்றைப் பெறும் வகையில் நகர்வுகளை விரைவுபடுத்துமாறு அரசாங்கங்களை 'கூட்டு'வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, கனடாவின் நகராட்சி அரசின் மீதான தலையீடும், கோரிக்கைகளுமான இலங்கைத் துணைத்தூதரக அதிகாரி Thushara Rodrigo வின் வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில், மத்திய அரசாங்கம் பதிலளிக்கவேண்டும் எனவும் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

மூன்றாவதாக, இமாலயப் பிரகடனம் தொடர்பாக,கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகர் உட்பட, கனேடிய அரசாங்கத்தின் ஈடுபாடுகள் மற்றும் தொடர்பாடல்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் வெளியிடுமாறு மத்திய அரசை நாங்கள் கோருகிறோம்.

மேலும், CTC எமது மக்களுடன் இணைந்து செயல்படுவதை உறுதிசெய்வதிலும், இனப்படுகொலையின் குற்றவாளிகளான இலங்கை அரசாங்கத்தை நீதியின் முன்கொண்டு வருவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளிலும், எங்களுடன் இணையுமாறு கனேடியத் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். சமாதானம், நீதி மற்றும், உண்மை ஆகியவற்றை அடைவதற்கான எமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் எந்த ஒரு அமைப்பு மற்றும் நிறுவனத்துக்கு எதிராகவும், நாம் ஒற்றுமையுடன் எதிர்த்து நிற்கவேண்டும்.

இறுதியாகவும் மற்றும் மிக முக்கியமாகவும், இலங்கையின் வெளிநாட்டுத் தலையீட்டைச் செயற்படுத்துவதையும், கனடா மற்றும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் CTC நிறுத்த வேண்டும். கனடாவில் இலங்கை அரசின் தலையீட்டை CTC உடனடியாகக் கண்டிக்கவேண்டும். அதேவேளை, இனப்படுகொலை நினைவுச் சின்னம் தொடர்பான தனது நிலைப்பாட்டையும் அது தெளிவுபடுத்தவேண்டும். துரதிருஷ்டவசமாக, இந்த விடயத்தில் CTC யின் மௌனம், இலங்கை அரசாங்கத்துடனான அதனது கூட்டுச் சதியாகவும் கருதப்படலாம். இது போன்ற துரோகங்களை எமது சமூகம் அமைதியுடன் பார்த்துக் கொண்டிருக்காது. இந்தச் சமூகத்திற்கு ஏற்படுத்தியுள்ள தீங்கை, CTC அங்கீகரிக்க வேண்டியது கட்டாயமானதாகும். இதனால் ஏற்பட்ட உளவியல் ரீதியிலான தாக்கத்திற்காக CTC நிபந்தனையற்ற முறையில் மன்னிப்புக் கோருவதுடன், கனேடியத் தமிழர்களின் ஒரு குரலாக தன்னை மீளவும் அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும்.

நாம் ஒன்றுபட்டால், தமிழர்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவதையும், தமிழர் வரலாறு ஏற்றுக்கொள்ளப்படுவதையும், நீதி வழங்கப்படுவதையும் நாம் உறுதி செய்யலாம். - என்று உள்ளது.

---

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

Head Office:
Toronto
10 Milner Business Court
Suite 513
Toronto, On M1B 3C6

Tel: 416 240 0078
Fax: 416 240 1601
www.canadiantamilcongress.ca
info@canadiantamilcongress.ca

### Canadian Tamil Congress Supports Tamil Genocide Memorial Monument in Brampton

***January 21, 2022*** - The Canadian Tamil Congress (CTC) extends its support for the establishment of Tamil Genocide Memorial Monument in City of Brampton's Chinguacousy Park. This monument would serve as a stark reminder to the injustices faced by Tamils in Sri Lanka.

CTC thanks City of Brampton and Mayor Patrick Brown in particular for the support, solidarity and encouragement provided for Tamil Genocide Memorial Monument project in Brampton.

CTC encourages Tamil Canadians to support this project.

# குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக கனேடியத் தமிழர் பேரவை அறிவிப்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 15

இலங்கை அரசாங்கத்துடன் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வருகின்றது என்ற அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிராகரிப்பதாக கனேடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனேடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

'கனேடிய தமிழர் பேரவை (CTC) இலங்கை அரசாங்கத்துடன் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வருகின்றது என்ற அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிராகரிக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்பதோடு CTC யின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் ஒரு திட்டமிட்ட முயற்சியாகத் தோன்றுகிறது. இவ்வாறான போலிப்பிரச்சாரங்களை கனடிய தமிழர் பேரவை வன்மையாக கண்டிக்கின்றது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் மனிதாபிமான நலன் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான அதன் அர்ப்பணிப்பில் CTC என்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் எங்களின் தொடர்ச்சியான முயற்சிகள் குறித்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

மேலும், பிராம்ப்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் அமைப்பதற்கும் CTC தொடர்ந்து தனது ஆதரவையளித்து வந்திருக்கின்றது. இந்த முன்முயற்சிக்கான எங்கள் ஆதரவு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது, 2022 இல் வெளியிடப்பட்ட CTC யின் ஊடக அறிக்கை தெளிவுக்காக இங்கே இணைக்கப்பட்டுள்ளது. முன்னோக்கி நகர்வதற்கு கடந்த காலத்தை இனப்படுகொலை என்று ஒப்புக்கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

எங்கள் பணியை இழிவுபடுத்தும் இந்த தீங்கிழைக்கும் முயற்சிகளால் CTC பின்வாங்கப்படாது, மேலும் தமிழ் சமூகத்தின் உரிமைகளையும் நலன்களை முன்னேற்றுவதற்கு முழு அர்ப்பணிப்புடன் CTC தொடர்ந்து செயற்படும்.' - என்று உள்ளது.




# இலங்கையின் தலையீட்டுக்கு நாம் அஞ்சப்போவதேயில்லை!

## பிறம்டன் நகர மேயர் பெட்ரிக் பிறவுண் திட்டவட்டம்

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 15

இனப்படுகொலை செய்த இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டுத் தலையீட்டினால் அஞ்சப்போவதில்லை என பிறம்டன் நகர மேயர் பெட்ரிக் பிறவுண் தெரிவித்துள்ளார்.

கனடாவுக்கான இலங்கை தூதரகத்தினைச் சேர்ந்த துஷார ரொட்ரிகோவினால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் எக்ஸ் தளத்தில் பெட்ரிக் பிறவுண் தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'தமிழ் இனப்படுகொலைக்கு காரணமான போர்க்குற்றவாளிகளை



ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அரசாங்கம் ஒப்படைக்கும் வரை உண்மையான நல்லிணக்கம் ஏற்படாது. துரதிர்ஷ்டவசமாக அரசாங்கம் இந்த போர்க் குற்றவாளிகளை மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குப் பதிலாக ஆடம்பரமாக அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருகிறது.

இலங்கையில் தமிழ் சமூகம் தமது அன்புக்குரியவர்கள் மற்றும் மாவீரர்களை நினைவுகூருவதை அரசாங்கம் தடுக்க முயலலாம். ஆனால் கனடாவில் அவ்வாறு செய்ய முடியாது. கனடாவில் நினைவேந்தல் நிகழ்வுகளை தடுக்க முயல்வது வெளிநாட்டு தலையீட்டின் செயலாகும்.

இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு எதிராக கனடா அரசாங்கம் கடுமையான போக்கை எடுக்கும் என நான்நம்புகிறேன்:-எனத்தெரிவித்துள்ளார்.





# நாய்க்கு விழ வேண்டிய கத்திக்குத்துகளை தாம் வாங்கிக் கொண்ட அதன் எஜமானர்!

கனடாவின் பெய்ரே பகுதியில் நாய் ஒன்றை காப்பாற்றுவதற்கு முயற்சித்த நபர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

டேவிட் மெக்டொனால்ட் என்ற நபர் தனது நாயுடன் நடந்து சென்றுள்ளார். இதன் போது மூன்று இளையர்கள் மோதிக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மூவரும் அங்கிருந்த நாற்காலிகளை உடைத்துக் கொண்டிருந்தனர் எனக்கூறப்பட்டது.

இதன் போது மெக்டொனால்ட், நாற்காலிகளை உடைக்க வேண்டாம் என இளைஞர்களிடம் கோரியுள்ளார்.

இந்த சம்பவத்தின் போது அவருக்கும் நாற்காலிகளை உடைத்தவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம், கைகலப்பாக மாற்றமடைந்துள்ளது.

அந்த இளைஞர்கள் தம்மை தாக்கினர் எனவும், தற்பாதுகாப்பு அடிப்படையில் தாம் நடந்து கொண்டார் எனவும், இதன்போது ஒருவர் கத்தியால் தாக்கினார் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

தனது நாயை கத்தியால் குத்த முயற்சித்த போது அதனை தடுப்பதற்குத் தாம் முயன்ற சந்தர்ப்பத்தில் இரண்டு தடவைகள் தான் கத்திக்குத்திக்கு இலக்கானார் என அவர் தெரிவிக்கின்றார். கத்திக்குத்து நடத்திய நபர்கள் தப்பிச் சென்றனர் எனத் மெக்டொனால்ட் தெரிவிக்கின்றார்.



# விபத்தில் காயமடைந்த பெண் விமான அம்புலன்ஸில் விரைவு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 15 மிசிசாகாவில் நெடுஞ்சாலை 410இல் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த பெண் ஒருவர் விமானம் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மூன்று வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்து தொடர்பில் நேற்று காலை 11:22 மணியளவில் டெர்ரி சாலைக்கு அருகே நெடுஞ்சாலையின் வடக்குப் பாதையில் அவசரக் குழுக்கள் அழைக்கப்பட்டன.

ஒரு காரை டிரக் பின்னால் மோதியுள்ளது. அதே நேரம் மூன்றாவது வாகனம் வீதியை விட்டு விலகி பற்றைக் காட்டுக்குள் பாய்ந்திருந்தது.

ஒரு விமான ஆம்புலன்ஸ் மூலம் பெண் ஒருவரை ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் என பீல் துணை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மூவர் உள்ளூர் மருத்து வமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனத் துணை மருத்துவர்கள் மேலும் தெரிவித்தனர்.



# மொன்றியால் மேற்கு தீவுகளில் மரக்கறிகள் பெறுவதில் சிக்கல்

கனடாவின் மொன்றியால் மேற்கு தீவுகள் பகுதியில் மரக்கறி, பழங்களை கொள்வனவு செய்வதில் மக்கள் நெருக்கடிகளை - சிரமங்களை - எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மரக்கறி மற்றும் பல வகைகளை கொள்வனவு செய்வது, சவால் மிக்கதாகக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதி மக்கள் உணவு பாதுகாப்பின்மை தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வருமானம் குறைந்த மக்கள் ஆரோக்கியமான உணவுகளையும் ஊட்டச்சத்தான உணவுகளையும் பெற்றுக் கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# ஒன்றரியோவில் விமான விபத்து!

ஒன்றரியோ மாகாணத்தின் ஒரோ மெடோனேட் நகரின் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் மதியம் விமான விபத்து ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த விமான விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணையை நடத்துவதற் காக ஒன்றாரியோ பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

பயிற்சி நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் எஞ்சினைக் கொண்ட சிறிய ரக விமானம் ஒன்றே இவ் வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானத்தில் பயணம் செய்தவர்களுக்கு எவ்வித காயங்களோ அல்லது உயிர் சேதங்களோ ஏற்படவில்லை எனவும் கூறப்பட்டது.

இந்த விமான விபத்துக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளைக் கனடிய போக்குவரத்து பாதுகாப்பு சபை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தில் புகைமூட்டம் ஏற்பட்டதாகவும், விமான ஓடு பாதையில் தரையிறக்கப்பட முன்தனாகவேது வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்றாரியோவில் மளிகை கடைகளில் இனிமேல் பியர், வைன் வாங்க முடியும்

ஒன்றாரியோ மாகாணத்தின் மது பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மாகாணத்தின் மளிகை கடைகளில் மதுபான வகைகளை கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மாதம் முதல் இவ்வாறு மதுபான விற்பனை தொடர்பான கெடுபிடிகள் தளர்த்தப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தின் 3,866 மளிகை கடைகளுக்கு பியர் மற்றும் வைன் வகைகளை விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் 1,617 நிலையங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்படும்ட சிறு மளிகைக்கடைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 5-ல் ஆம் திகதி முதல் இந்த மளிகை கடைகளில் பியர் மற்றும் வைன் போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக இடங்களில் மதுபான விற்பனையை மேற்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு உரிமம் வழங்கப்படும் நிறுவனங்கள் சில நியமங்களைப் பின்பற்ற வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது.

இந்த கடைகளில் பணியாற்றும் பணியாளர்கள் 18 வயதிற்கும் மேற்பட்ட வர்களாக இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# கனடிய எல்லையால் வரும் ஏதிலிகளை கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா தீவிரம்

கனடிய எல்லைப் பகுதியில் ஏதிலிகள் குறித்த சட்டம் கடுமையாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உள்துறை திணைக்களம் இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையிலான எல்லைப் பகுதியில் ஏதிலி அந்தஸ்து கோரும் நபர்கள் சட்டத்தரணியின் ஆலோசனை பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.




அமெரிக்காவில் ஏதிலி அந்தஸ்து கோருவோருக்கு கனடிய எல்லை பகுதியிலேயே முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இது தொடர்பில் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கனடியே எல்லை வழியாக அமெரிக்காவிற்குள் பிரவேசிக்கும் ஏதிலிகளின் எண்ணிக்கை அமெரிக்க - மெக்சிகோ எல்லையில் இருந்து பிரவேசிக்கும் எண்ணிக்கை விடவும் குறைவானது.

எனினும் அண்மைக்காலமாக கனடாவில் இருந்து அமெரிக்காவில் பிரவேசிக்கும் ஏதிலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஏதிலிகளின் வருகையை கட்டுப்படுத்தும் நோக்கில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

